அசல்

10.8.1930 தி.பொ. பழநியப்பப் பிள்ளை
இதழ்-1, பக்கம்-1,

உ
திருச்சிற்றம்பலம்.

திருச்சிராப்பள்ளி,
10-8-30.

பேராசிரியப் பெருந்தகையீர்!

நலம். அடியனேன் வணக்கத்தை யேற்றருள்க. நீவிர் அண்மையிற் பதிப்பித்த 'தக்கயாகப்பரணி' நூலைப் பெற்றுப் படித்து வருகின்றேன். மகாவித்துவான் - பிள்ளையவர்கள் வரலாற்றினை பெருநூலாகத் தாம் எழுதுவதை யுணர்ந்து மகிழ்ச்சியுறுகின்றேன். அதனை விரைவிற் பெறக்கூடுமோ? நிற்க, அடியனேன் கச்சியப்பர் கந்தபுராண நூலைப் படிக்குங்கால் அதன் முதற்காண்டத்தேயுள்ள மேருப்படலச் செய்யுட்களுள் இரண்டற்குக் கருத்தும், வரலாறும் விளங்க அறிந்து கொடலியலாமையால், முத்தமிழ்த் துறையின் முறைபோகிய தங்கள் உதவியறிதற்கு இஃது எழுதினேன். கல்விமாட்டுயர்ந்த அடியனேன் வேட்கையைத் தணிவித்தல் நுங்கடனாமையன்றோ! அதுவன் அவ்வையங்களைத் தெளிவிக்குமாறு மிக விரந்து வேண்டுகின்றேன். குறித்த செய்யுட்கள் - வருமாறு

21-செ. பொற்புறு மிறைவன் றாற்றும் புவனமேன் மகளிர் மைந்தர்
அற்பொடு கலந்து காமத் தரும்பயன் கோடன் மேற்றே
தற்பர வடிவ னிறைத் தன்மையா லவனை யீட்டம்
நற்புன லிடல் பெற்று நறுக்குந் தன்மையே போல்:-

இதனுட் பின்னிரண்டடியே விளக்குதற்குரிய; "வடிவன் அவனையீட்டல் கட்கிட்ட அதனை யாது? 'புனலிடல் பெற்று நறுக்குந் தன்மை' என்னை? இதனுட் கண்ட வரலாறு கூறும் நூலாதாரம் உண்டோ?

23. இருந்திடு விரிஞ்சன் மாயோ னிருவரு மீசன் றன்பாற்
பொருந்திடு புணர்ச்சி கொண்டு முத்தியிற் புக்க சேயும்
திருந்துசீர் வசிட்டன் சொல்லாற் சிலையெனப் பன்னாணின்ற
அருந்ததி மாதும் போன்றோர் அடலவர் மகளிரெல்லாம்:-

இதனுள்ளும் பின்னிரண்டடியே வரலாறு விளக்குதற்குரியன: இதற்கும் நூலாதாரம் யாண்டேனும் உண்டோ? அறிவிக்க.

பெருந்தகையீர்! அடியேன் கொண்ட பணிகள் பல விருக்கவு மடியேனது கோ[illegible] காதலைக் கருதும் மாண்பினனென் றெண்ணுவேன். இடைஞ்சலாது புரிந்து நீயளித்த விடைத் தேன் என்று புறக்கணியாது நும் இயல்பாகிய பெருங்குணத்தால் இவற்றைத் தெளிவிக்க வேண்டுகிறேன். விடை விளக்கமாக அருளுமாறு பிரார்த்திக்கின்றேன். விரைவின் விடை பெறும் நோக்கத்தோடு விலாசங் குறித்த அஞ்சலட்டை யனுப்புகின்றேன். * இத்திருத்தலத்துப் பயிருப்பதைப் பொறுத்தருள்க. இவற்றொடு பாட்டியற்கண் விலக்காற் பாடுற்ற 'வயிற்றியம்' இன்னதென்றும் விளக்க வேண்டுகின்றேன் - இச்சொற் பொருளோடு ஒருங்கு 'எண்பத் தெட்டாங் கால் நின்றதாள்' என்பது விளங்க அறிந்திலேன். மற்று சன்மம், அநுசன்மம், உபசன்மம் முறைகளை உணர்வேன்றோற்றல். புலத்துறை முற்றிய புண்ணியப் பெரியீர்! அறிவிலேனுடைய ஐயப்பாடுகளை விரைவிற் றெளிவிக்கவேணு

அசல்

10.8.1930 திரு. கா. சுப்பிரமணியப் பிள்ளை

அசல்-1, நகல்-1,

மீட்டுமொருகால் இரந்து எழுதுகின்றேன்.

இங்ஙனம்,

தம் அடித்தொண்டன்,

தி. பொ. பழனியப்ப பிள்ளை,

தமிழ்ப் பண்டிதர்,

நாஷனல் காலேஜ் ஹைஸ்கூல்,

திருச்சிராப்பள்ளி.

Pages
169-172.
தி.க. Vol K.
Copied

நகல்

Page 169–172 / த.க. Vol. K.

2.

திருச்சிராப்பள்ளி,
10-8-30.

திருச்சிற்றம்பலம்

பேராசிரியப் பெருந்தகையீர்!

நலம். அடியனேன் வணக்கத்தையேற்றருள்க. நீவிர் அண்மையிற் பதிப்பித்த 'தக்கயாகப் பரணி' நூலைப் பெற்றுப் படித்து வருகிறேன். மகாவித்துவான் பிள்ளையவர்கள் வரலாற்றினை ஒரு தனிநூலாகத் தாம் எழுதி வருவதுணர்ந்து மகிழ்ச்சியுறுகின்றேன். அதனை விரைவிற் பெறக்கூடுமோ? நிற்க. அடியனேன் கச்சியப்பர் கந்தபுராண நூலைப் படிக்குங்காலை யதன் முதற் காண்டத்தே யுள்ள மேருப்படலச் செய்யுட்களுள் இரண்டனுட் கருத்தும் வரலாறும் விளங்க வறிந்து கோடலாயலாமையால் முத்தமிழ்த் துறையான் முறைபோகிய தங்களை உசாவியறிதற்கு இஃது எழுதினேன். கல்லாமாட்டமைந்த அடியனேன் வேட்கையைத் தணிவித்தல் நுங்கடமையன்றோ! அதனான் அவ்வையங்களைத் தெளிவிக்குமாறு மிகவிரந்து வேண்டுகின்றேன்.
குறித்த செய்யுட்கள் — வருமாறு.

21. செ. பொற்புறுங் குறைவின் றுற்றும் புவனமேன்
மகளிர் மைந்தர்
அற்பொடு கலந்து காமத் திரும்பயன் கோட
றெற்றார்.
தற்பர வடுகன் ஞானத் தன்மையா லலகை
யீட்டம்.
நற்புன னிழல் பெற்று நணுகுருந் தன்மை
யேபோல்.

இதனுட் பின்னிரண்டடியே விளக்கற்குரிய "வடுகன் அலகையீட்டங் கட்கிட்டவினை யாது? "புனனிழல் பெற்று நணுகுருந் தன்மை" என்னை? இதனுட் கண்ட வரலாறு கூறும் நூலாதாரம் உண்டோ?

23. இருந்திட விரிஞ்சன் மாயோ னிருவரு
மீசன் றன்பாற்
பொருந்திடு மிணர்ச்சி கொண்டு
முத்தியாற் புக்கசேயும்

நகல்

திருந்துசீர் வசிட்டன் சொல்லாற்
சிலையெனப் பண்ணிநின்ற
அருந்ததி மாதும் போன்றார் ஆடவர்
மகளிரெல் லாம்.

இதனுள்ளும் பின்னிரண்டடியே வரலாறு விளக்கற்குரியன. இதற்கும் நூலாதாரம் யாதே னும் உண்டோ: அறிவிக்க.

பெருந்தகையீர்! அரிதிற் கொண்ட பணி கள் பலவிருக்க உடற்றளர்வு நோக்காதுழைக் கும் நும்மாண்பினை யென்னென்பேன். இடை தெரியாது புகுந்து ஐயவினா விடுத்தேனென் று புறக்கணியாது நும் இயல்பாகிய பெருங் கருணையால் இவற்றைத் தெளிவிக்க வேண்டு கிறேன். விடை விளக்கமாக அமையுமாறு பிரார்த் திக்கின்றேன். விரைவின் விடை பெறும் நோக் கத்தோடு விடைக்கடிதத் தபாற் கட்டணமாக முத்திரைத்தலை அனுப்பியிருப்பதைப் பொருத்தி டுக. இவற்றொடு பாட்டியற்கண் விலக்கற்பா டுற்ற 'வயாசியம்' இன்னதென்றும் விளக்க வேண்டுகின்றேன். இச்சொற்பொருளறிந்தே னெனினும் "எண்பத் தெட்டாங் கால் நின்றநாள்" என்பது விளங்க அறிந்திலேன். மற்று சன்மம், அநுசன்மம், உபசன்மம் முறைகளை உணர் வேன் சோதிடரால். புலத்துறை முற்றிய புண் ணியப் பெரியீர்! அறிவு வெண்மையேன் ஐயப் பாடுகளை விரைவிற் றெளிவிக்குமாறு மீட்டு மொருகால் இரந்து குறையுறுகின்றேன்.

இங்ஙனம்,
நும் அடித்தொண்டன்,
தி.பொ. பழனியப்ப பிள்ளை,
தமிழ்ப் பண்டிதன்
நேஷனல் காலேஜ் ஹைஸ்கூல்
திருச்சிராப்பள்ளி.

நகல்

15

1

த.க. Vol K—169-172

pages 169-172.

copied

தி.பொ. பழனியப்பபிள்ளை.

10-8-'30

22